# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2037 கார்த்திகை 22 வெள்ளிக்கிழமை (08.12.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 12


# புலிகளோடு போவர் இன்று முக்கிய பேச்சு



கொழும்பு, டிசெம்பர் 8

நோர்வேயின் விசேட சமாதானத் தூதர் ஜோன் ஹன்ஸன் போவருக்கும் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கும் இடையிலான முக்கிய சந்திப்பு இன்று முற்பகல் கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது.

போர்நிறுத்த உடன்படிக்கையின் கதி உட்பட முக்கிய விடயங்கள் குறித்து விடுதலைப் புலிகளோடு போவர் பேச்சு நடத்துவார். விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் மாவீரர் தின உரை, அரசு அமுலுக்குக் கொண்டுவந்திருக்கும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் ஆகியன பேச்சுகளில் முக்கிய இடம்பெறும்.

போர் நிறுத்த உடன்படிக்கையின் ஷரத்தை மீறுகின்ற பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் தொடர்பில் புலிகள் தரப்பின் கருத்து இன்றைய பேச்சின்போது வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கிளிநொச்சிக்கு புறப்படுவதற்கு முன்னர் நேற்றுமாலை ஹன்ஸன் போவர் அரச சமாதானச் செயலகப் பணிப்பாளர் கலாநிதி பாலித கொஹென்னவுடன் நீண்ட நேரம் பேச்சு நடத்தினார்.

பயங்கரவாதத் தடுப்புச்சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது குறித்தும் இச்சட்டத்தின் மூலம் புலிகளுடன் பேச்சு நடத்த எதுவித இடையூறுகளும் ஏற்படாது என்றும் கலாநிதி பாலித கொஹென்ன, ஹான்சன் போவரிடம் விளக்கிக் கூறியதாகத் தெரியவருகிறது.

கிளிநொச்சியில் இன்று காலை 10.30 மணிக்கு புலிகளின் சமாதான செயலகத்

(06 ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் பரவலாக தேடுதல், சுற்றிவளைப்பு

யாழ்ப்பாணம், டிசெ.8

குடாநாட்டின் சில இடங்களில் படையினரின் சுற்றிவளைப்புக்களும், பாதுகாப்பு நடவடிக்கைகளும் நேற்றுத் தீவிரமாக்கப்பட்டிருந்தன.

யாழ்.நகரை அண்டிய பகுதிகளில் புதிய காவலரண்கள் அமைக்கப்பட்டு வீதியில் சென்றவர்களும் வாகனங்களும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

கரவெட்டியை அண்டிய பகுதிகளில் நேற்று அதிகாலை 5 மணிமுதல் மாலை 4 மணிவரை படையினர் சுற்றிவளைப்புத் தேடுதல்களை மேற்கொண்டனர்.

தீருவில், வல்வெட்டித்துறைப் பகுதிகள் படையினரால் நேற்று சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல்கள் இடம்பெற்றன. இத் தேடுதல்களில் எவரும் கைது செய்யப்பட்டதாகத் தகவல் இல்லை. (அ-1-79-155-115)

# போர்நிறுத்த உடன்படிக்கையின் 2.12 விதியை பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் மீறுகிறது!

## அரசிடமிருந்து விளக்கம் எதிர்பார்க்கிறது கண்காணிப்புக்குழு

கொழும்பு, டிசெ.8

நாட்டில் பயங்கரவாதச் செயல்களை ஒடுக்குவதற்காக அரசு மீண்டும் அமுலுக்கு கொண்டுவந்திருக்கும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம், அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே அமுலில் இருக்கும் போர்நிறுத்தப் புரிந்துணர்வு உடன்படிக்கையின் சில சரத்துகளை அப்பட்டமாக மீறுகின்றது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் அமுலாக்கம் போர்நிறுத்த மீறலா, இல்லையா என்பதை உறுதிப்படுத்தி அறிக்கை விடுப்பதற்கு அல்லது கருத்துத் தெரிவிப்பதற்கு இன்னும் சிறிது அவகாசம் தேவைப்படுவதாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு தெரிவித்திருக்கிறது.

நடைமுறைக்கு வந்துள்ள சட்டம் தொடர்பில் அரசிடமிருந்து தெளிவான அறிக்கை ஒன்றை பெற்றுக்கொண்ட பின்னரே கண்காணிப்புக் குழு இதுவிடயத்தில் தனது தீர்மானத்துக்கு வரும் என்று தெரிகிறது.

போர்நிறுத்த உடன்படிக்கையை மீறுகின்ற இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த வசதியாக உடன்படிக்கையின் 2.12 சரத்தை மாற்றி அமைக்க அரசுத்தரப்பு நோர்வேயிடம் கோரும் என்றும் தெரிகின்றது.

போர் நிறுத்த உடன்படிக்கையின் 2.12 சரத்தில் பயங்கரவாதத் தடைச்சட்டம் குறித்து பின்வருமாறு கூறப்பட்டிருக்கிறது:-

(06 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் இளைஞர் சுட்டுக் கொலை

வவுனியா, டிசெ.8

வவுனியா - சாஸ்திரிகூழாங்குளம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு தமிழ் இளைஞர் ஒருவர் இனந்தெரியாத ஆயுததாரிகளினால் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

தங்கராஜா பிரபாகரன் என்பவரே கொலையுண்டவர் என அடையாளங் காணப்பட்டுள்ளார். குறித்த இளைஞன் இரவு நேரம் தனது வீட்டிற்குச் சென்றுகொண்டிருக்கையில் வழியில் இனந்தெரியாத நபர்களால் வழிமறிக்கப்பட்டுச் சுடப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இளைஞனின் சடலம் வவுனியா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ஐ-164)

## இரு படையினர் உயிரிழப்பு

வவுனியா, டிசெ.8

வவுனியா - செட்டிக்குளம் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற கிளைமோர் தாக்குதலில் இரண்டு படையினர் உயிரிழந்திருக்கின்றனர்.

இரவு 7.30 மணியளவில் செட்டிக்குளம் பகுதியில் வீதி ரோந்தில் ஈடுபட்ட படையினரை இலக்கு வைத்தே இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

உயிரிழந்த இரண்டு படையினரின் சடலங்களும் வவுனியா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன. (ஐ-164)

# பேச்சுவார்த்தைகளில் இணங்கியதை செயற்படுத்த இணைத் தலைமை நாடுகள் அழுத்தம் தர வேண்டும்

## யாழ்.வந்த அமெரிக்கத் தூதரிடம் ஆயர்

யாழ்ப்பாணம், டிசெ.8

இலங்கை விவகாரத்தில் நோர்வே இதுவரை மேற்கொண்ட முயற்சிகளில் எந்த முன்னேற்றமும் காணப்படவில்லை.

ஆகையால் பேச்சுவார்த்தைகளின் போது காணப்பட்ட இணக்கப்பாடுகளையும் இனிமேல் எட்டப்படக்கூடிய உடன்பாடுகளையும் நடைமுறைப்படுத்துவதற்கு இணைத் தலைமை நாடுகள் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுப்பதன் மூலமே நிரந்தர சமாதானத்தையும் அதன் மூலம் நிரந்தர அமைதியையும் காண முடியும்.

நேற்று யாழ்ப்பாணம் வந்த அமெரிக்கத் தூதர் ரிச்சர்ட் ஓ பிளேக்கிடம் யாழ்.ஆயர் அதிவண. தோமஸ் சௌந்தரநாயகம் மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

யாழ்ப்பாணத்துக்கு ஒரு நாள் விஜயம் மேற்கொண்டுவந்த அவர், யாழ். அரச அதிபர். கே.கணேஸ், யாழ்.ஆயர் அதிவண தோமஸ் சௌந்தர நாயகம், மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகள் மற்றும் ஐ.நா.சார்பு நிறுவனப் பிரதிநிதிகள் ஆகியோருடன் கலந்துரையாடி யாழ்.நிலைமைகள் குறித்து ஆராய்ந்தார்.



யாழ்.ஆயர் இல்லத்தில் நடந்த சந்திப்பில் ஆயர் வலியுறுத்திய முக்கிய விடயங்கள் வருமாறு

(06 ஆம் பக்கம் பார்க்க)

# இந்தியா தலையிட்டு தீர்வுகாணக்கோரி தமிழக சட்ட சபையில் நேற்றுத் தீர்மானம்

சென்னை, டிசெ. 8

இலங்கைப் பிரச்சினையை இந்தியா தலையிட்டுத் தீர்க்க வேண்டும் என்று வலியுறுத்தி தமிழ்நாடு சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அதற்கான பிரேரணையை பாட்டாளி மக்கள் கட்சி சபையில் கொண்டுவந்தது.

இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து தமிழ்நாடு சட்டசபையில் நேற்று வியாழக்கிழமை சட்டசபை உறுப்பினர்கள் பேசும்போது மிகவும் ஆழ்ந்த கவலை தெரிவித்து உரையாற்றினர்.

அதைத் தொடர்ந்து தமிழ்நாடு முதலமைச்சர் கருணாநிதி பதிலளித்து உரையாற்றினார். அவர் கூறியதாவது:-

ஒவ்வொரு கட்சி உறுப்பினர்களும் தங்களது உணர்வு பூர்வமான கருத்துகளை இங்கு தெரிவித்தனர். இந்தப் பிரச்சினை குறித்து நானும் ஏற்கனவே பேசியிருக்கிறேன். அதையே சொல்லி பிரச்சினையைத் தட்டிக் கழிக்க நான் விரும்பவில்லை.

தமிழக மக்களின் உணர்வு எப்படி எல்லாம் கடந்த சில நாள்களாக வெளிப்படுத்தப்படுகிறது என்பதை நான் புதுடில்லி சென்றபோது சோனியா காந்தியிடம் எடுத்துக் கூறியிருக்கிறேன்.

இப்போது வாய்ப்பு ஏற்பாட்டாலும் புது

(06 ஆம் பக்கம் பார்க்க)

# முழுநாடும் மக்களும் அவலப்பட நேரும்

## பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் பற்றி தயா மாஸ்டர்

கிளிநொச்சி, டிசெ.8

பயங்கரவாதத் தடைச் சட்டத்தால் நாடும், மக்களும் பெரும் அல்லல்பட நேரிடும்.

இப்படிக் கருத்து வெளியிட்டிருக்கிறார் விடுதலைப் புலிகளின் ஊடக இணைப்பாளர் தயா மாஸ்டர்.

அரசு அமுலுக்குக் கொண்டுவந்திருக்கும் பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்பாக 'றொய்ட்டர்' செய்தி நிறுவனத்துக்குக் கருத்து வெளியிட்டபோது அவர் கூறியதாவது:-

"போர் நிறுத்த உடன்படிக்கை, இந்த அரக்கனைச் சில காலம் உறங்க வைத்திருந்தது. இப்போது இந்த அரக்கனுக்கு மீண்டும் புத்துயிர் அளிக்கப்பட்டுள்ளது.

"விடுதலைப் புலிகள் மட்டுமல்ல, தமிழ் இளைஞர்கள் ஸ்ரீலங்காப் படையினரால் மீண்டும் துன்புறுத்தலுக்கு உள்ளாகப் போவது இயற்கையானது. மாய வட்டம் ஒன்றை அரசு மீண்டும் ஆரம்பித்து வைத்

(06 ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## நாகமணி கணபதிப்பிள்ளை



சரவணையைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட நாகமணி கணபதிப்பிள்ளை 06.12.2006 அன்று காலமாகி விட்டார்.

அன்னார் சிவபாக்கியத்தின் பாசமிகு கண வரும் ராதா (கனடா), ஈசன் (கனடா), பாமா (கனடா), சசி (சுவிஸ்), காலஞ்சென்ற மங்கை ஆனந்தி, வாசுகி (சண்டிலிப்பாய் பிரதேச செயலகம்), தாஸ் (கனடா), மயூரன் ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றி விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மானிப்பாய். (56558)

தகவல்:
**மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.**

## கலாநிதி S.K.சண்முகநாதன் (M.A., Ph.D)
### (முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர், பொருளியல் துறை, யாழ். பல்கலைக்கழகம்)



சுதுமலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கலாநிதி S.K.சண்முகநாதன் நேற்று (07.12.2006) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற விநாசித்தம்பி - சின்னம்மா தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற மகாலிங்கத்தின் பெறாமகனும் பார்வதவர்தனியின் அன்புக் கணவரும் சாரதாமணியின் (U.K.) அன்புச் சகோதரனும் விநாயகமூர்த்தி (U.K.) இன் அன்பு மைத்துனரும் பாலசுந்தரம்(கனடா), திருமதி மங்கயர்க்கரசி இராசதுரை (U.K.) ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரனும் சங்கரின் (U.K.) அன்பு மாமனும் Dr. தாமரை (U.K.), கந்தவேள் (U.K.), பாலாம்பிகை (U.K.), யோகாம்பிகை (கனடா), வினுசியா (கனடா), நிரஞ்சன், அபிராமி ஆகியோரின் பெரியதந்தையும் விஷ்வாவின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கைலாசபதி,
சுதுமலை வடக்கு, மானிப்பாய்.
தொ.பே : 021 222 6450
021 4591365 (56565)

தகவல்:
**மனைவி.**

## திருமதி தங்கம் சபாரத்தினம்



மாதகலைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கம் சபாரத்தினம் நேற்று (07.12.2006) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இலகுப்பிள்ளை - சபாரத்தினத்தின் அன்பு மனைவியும் அருள்சுப்பிரமணியம் (கனடா), தனராஜ் (அரசாங்க கட்டட ஒப்பந்தக்காரர்) ஆகியோரின் அன்புத் தாயும் யோகசக்தி (கனடா), ஞானாம்பிகை ஆகியோரின் அன்பு மாமியும் அசோக், அருண், பாபுஜி (கனடா), நிஜிதா, கீர்த்திகா, திருக்குமரன், ஏகவரதன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான தெய்வானை, வள்ளியம்மை, பராக்கிரமசிங்கம் (ஓய்வுபெற்ற பொது முகாமையாளர், வட பிராந்திய போக்குவரத்துச்சபை ) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.12.2006) வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்[illegible] ஏற்றுக்கொள்ளவும்.

பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். (56566)

[illegible]
(மகன்)

## செல்லத்துரை கனகசுந்தரம்



நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் குரும்பசிட்டியை வசிப்பிடமாகவும் மணல்தறை ஒழுங்கை, கந்தர்மடத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை கனகசுந்தரம் நேற்று (07.12.2006) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் நாவற்குழியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற குரும்பசிட்டி திருமதி பரமேஸ்வரி இராசேந்திரத்தின் மருமகனும் காலஞ்சென்ற விக்கினேஸ்வரியின் அன்புக் கணவரும் செல்வநாயகம் (குச்சுத்தம்பி), காலஞ்சென்ற வசந்தா ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.12.2006) வெள்ளிக்கிழமை பி.ப ஒரு மணிக்கு நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

60, மணல்தறை ஒழுங்கை,
கந்தர்மடம்.
தொ.பே : 222 4590 (56569)

தகவல்:
**செ.செல்வநாயகம் (குச்சுத்தம்பி).**

## பொன்னையா கந்தையா (கனகையா)



கோப்பாய் வடக்கைச் சேர்ந்த பொன்னையா கந்தையா நேற்று (07.12.2006) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா-தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கந்தையா - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் மனோன்மணியின் அன்புக் கணவரும் சற்குணலிங்கத்தின் (பிரதேச செயலகம், கோப்பாய்) அன்புத் தந்தையும் ஜெயசிறியின் அன்பு மாமனும் சசிரேகா (மாணவி, யா/வே.ம.உ.கல்லூரி), கேசவரூபன் (மாணவன் (யா/பரியோவான் கல்லூரி), கேசனா (யா/இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.12.2006) நண்பகல் 12 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மாக்கம்பரை,
கோப்பாய் வடக்கு,
கோப்பாய். (56571)

தகவல்:
**க.சற்குணலிங்கம்**
(பிரதேச செயலகம், கோப்பாய்)

**ஐடியல் அக்கடமி**
நீராவியடி. யாழ்.நகர்.

**தரம் 6 முதல் O/L வரை**
**கல்வியாண்டு 2007**
**ஆரம்பம் :**
**09.12.2006 சனி காலை 8 மணி**
**கணித ஆசானும் நிர்வாகியும்**
**V.N.பத்மநாதன்**

**சிறு விமானசேவை**
**யாழ், கொழும்பு விமான சேவைகள்**
தனியார் நிறுவனத்தின் நான்கு பேர் பயணிக்கத்தக்க சிறு விமான சேவை உத்தரவாதத்துடன் நடைபெறுகின்றது.
தொடர்புகளுக்கு:
**RAINBOW TRAVELS & TOURS**
32 1/2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே :
021 222 3237
0115371629 கொழும்பு
0777535988 கொழும்பு

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**அமரர் முத்தையா கந்தையா**

தோற்றம் 25.05.1930 மறைவு 08.11.2006

**ஊர் புகழ வாழ்ந்து எமக்கு வழி காட்டிய தெய்வமே! என்றும் உங்கள் நினைவு எமைவிட்டுமாறாது.**

அரசடி, நவாலி,
மானிப்பாய்.

**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

# மரண அறிவித்தல்கள்

## தம்பையா குமாரசாமி (T.K)

காரைநகர், பலுகாட்டைப் பிறப்பிடமாகவும் 352, நாவலர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்டவரும் குமாரசாமி ரெக்ஸ்ரைல் மற்றும் குமாரசாமி அன் சன்ஸ் நிறுவனங்களின் உரிமையாளருமான தம்பையா குமாரசாமி (T.K) நேற்றுக் கொழும்பில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

352, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 222 5565
11A, பொஸ்வெல் பிளேஸ்,
வெள்ளவத்தை.
தொ.பே: 011 2501185

தகவல்:
**விமலகுமார் (மகன்)**

## தம்பிஐயர் யோகேஸ்வர சர்மா

கொக்குவில் சோதிடபரிபாலன மடத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிஐயர் யோகேஸ்வரசர்மா நேற்று 07.12.2006 காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிஐயர் - பார்வதவர்த்தனி அம்மா தம்பதியரின் மூத்த மகனும் லலிதாம்பாளின் அன்புக் கணவரும் விஸ்வநாதசர்மா, காலஞ்சென்ற தியாகராஜ ஐயர், சரஸ்வதி அம்மா, கனகாம்பிகை அம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரரும் காலஞ்சென்றவர்களான வாக்கிய பஞ்சாங்க கணிதர் இ.சி.இரகுநாதையர், இரத்தினசபாபதி ஐயர் -இரத்தினம்மா தம்பதியர், கெங்காதரக் குருக்கள், சோமசுந்தர ஐயர் ஆகியோரின் மருமகனும் காலஞ்சென்ற யோகவல்லி அம்மாவின் பெறாமகனும் வாக்கிய பஞ்சாங்கக் கணிதர் இ.வெங்கடேச ஐயரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.12.2006) பிற்பகல் அவரது இல்லத்தில் நடைபெற்று, கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சோதிட பரிபாலன மடம்,
அச்சுக்கூட ஒழுங்கை,
[illegible]
கொக்குவில்.
தொ.பே: 222 3125

தகவல்:
**லலிதாம்பாள் (மனைவி),**
**இ.வெங்கடேச ஐயர் (மைத்துனர்)**
வாக்கிய பஞ்சாங்க கணிதர்

# மரண அறிவித்தல்கள்

## ஆறுமுகம் திருஞானசம்பந்தர்
### (A.T. சம்பந்தர் பஞ்சுக்கடை உரிமையாளர்)

வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் பிறவுண் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் திருஞானசம்பந்தர் நேற்று 07.12.2006 காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.12.2006) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் முற்பகல் 10 மணிக்கு தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

193/1, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். (56557)

தகவல்:
**மனைவி, பிள்ளைகள்.**

## சிவசம்பு தனேஸ்வரன்

தில்லைகட்டி, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சிவசம்பு தனேஸ்வரன் நேற்று (07.12.2006) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசம்பு - பொன்னுப்பிள்ளையின் அன்பு மகனும் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற தம்பித்துரை, துரைசிங்கம் மற்றும் தனபாலசிங்கம் ஆகியோரின் சகோதரனும் குகவதனா, குகதாஸ், உதயனன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஸ்ரீகதிர்காமர், சிவாஜினி, சர்மினி, ஆகியோரின் மாமனும் சபிதா, மேனன், ராம்குமார் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தில்லைகட்டி,
சுன்னாகம். (சி/51491)

தகவல்:
**மனைவி, பிள்ளைகள்.**

## சிவக்கொழுந்து பாலசிங்கம்



பெரியவிளானைப் பிறப்பிடமாகவும் மாகியப்பிட்டியைச் சொந்த இருப்பிடமாகவும் கனடா மொன்றியலில் வசித்து வந்தவருமான சிவக்கொழுந்து பாலசிங்கம் 30.11.2006 மொன்றியலில் காலமானார்.

அன்னார் பெரியவிளான் சிவக்கொழுந்து - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் மாகியப்பிட்டி மயில்வாகனம் - நேசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் இந்திரராணியின் (தனம்) அன்புக் கணவரும் பாமினியின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற உருத்திரசிங்கம், மகேஸ்வரி (மணி), இராசலக்சுமி (ஜேர்மனி), காலஞ்சென்ற கேசலிங்கம், பரமேஸ்வரி, சரோஜா (ஜெகம்), சோமசுந்தரம் (கனடா), சிவயோகம் (பவுண்), புவனேஸ்வரி(சந்திரா), புனிதமலர் (இந்திரா), சந்திரகுமார், காலஞ்சென்ற சுதாகரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் லோகநாயகி, காலஞ்சென்ற கோதண்டபாணி, நவரத்தினம் (ஜேர்மனி), தெய்வேந்திரம், கந்தசாமி, மதிவதனா, ரட்ணராஜா, காலஞ்சென்ற லோகநாதன், சிவராசா, ராதா, காலஞ்சென்ற அமிர்தலிங்கம், காலஞ்சென்ற யோகராணி, தெய்வேந்திரம் - பரமேஸ்வரி, காலஞ்சென்ற பத்மநாதபிள்ளை (பப்பா) - கலாதேவி, இராசேந்திரம்-ஞானப்பூங்கோதை, நாகேந்திரன் - இந்திரபவானி (இத்தாலி), வனஜராணி - பாக்கியநாதன், கஜேந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் சிவசுப்பிரமணியம் (சின்னராசா) - இராசமலர் தம்பதியரின் பெறாமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.12.2006) சனிக்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மாகியப்பிட்டி,
சண்டிலிப்பாய். (56550)

தகவல்:
**குடும்பத்தினர்.**

## தம்பிமுத்து கந்தப்பிள்ளை



594, காங்கேசன்துறை வீதி, நாச்சிமார் கோயிலடியைச் சேர்ந்த தம்பிமுத்து கந்தப்பிள்ளை நேற்று (07.12.2006) வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லம்மாவின் அன்புக் கணவரும் ராஜேஸ்வரி, பாக்கியம் (Red.Tex Officer- கொழும்பு), முத்துலிங்கம் (மண்பரிசோதகர் - திருகோணமலை), பஞ்சாட்சரம் (ஜேர்மனி), வேலாயுதம் (ஆசிரியர் - கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் பேரின்பநாயகம் (ஓய்வுபெற்ற காசாளர் - ப.நோ.கூ.சங்கம் , சுன்னாகம்), செல்வரட்ணம் (ஓய்வுபெற்ற மண் பரிசோதகர்), சாந்தினி, ராஜேஸ்வரி (ஜேர்மனி), ரவீந்திராதேவி ஆகியோரின் அன்பு மாமனும் Dr. தாரிணி (போதனா வைத்தியசாலை - யாழ்ப்பாணம்), Dr.குருபரன் (இருதய வைத்திய நிபுணர்), சண்முகராசா (கனடா), சேந்தன் (கணிய அளவியலாளர் - அபுதாபி), சோமேசன் (கணிய அளவியலாளர் - துபாய்), கிருபாலினி (4ஆம் வருட மாணவி - யாழ் மருத்துவ பீடம்), அமுதீசன் (கனடா), செந்தூரன் (கணனிப் பொறியியலாளர் - IFS), ஞானரூபன் (மாணவன் - கொழும்பு மருத்துவபீடம்), ஆதவன் (4ஆம் வருடம் - யாழ். மருத்துவபீடம்), வாகீஸ்வரன் (மாணவன் - கொழும்பு மருத்துவபீடம்), கஜனி (ஜேர்மனி), நஜிகரன் (ஜேர்மனி), சஞ்சீவினி ( ஜேர்மனி), மகேசன் (ஜேர்மனி), சரவணன் (2ஆம் வருட மருத்துவபீட மாணவன் - ரஷ்யா), பாமா (வேம்படி மகளிர் கல்லூரி), கோகுலன் (யாழ். இந்துக் கல்லூரி), நேமிலா, தர்சினி ஆகியோரின் அன்புப் பேரனும் ரேஷாந், சங்கரன் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.12.2006) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

காங்கேசன் துறை வீதி,
நாச்சிமார்கோயிலடி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 6202
021 222 3394 (56570)

தகவல்:
**க.வேலாயுதம் (மகன்),**
**வை.பேரின்பநாயகம் (மருமகன்)**

## செல்லையா ரகுநாதன்
### (உரிமையாளர், பிள்ளையார் ஹாட்வெயர், ஸ்ரான்லி வீதி)



கொட்டடியைப் பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா ரகுநாதன் 06.12.2006 புதன்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் சாந்தகுமாரியின் அன்புக் கணவரும் டினோஜா, ராம்கேசல், ராம்வில்சன், அபிஷாயினி, கிருஷாயினி ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.12.2006) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 2 மணியளவில் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அந்திரான்,
சண்டிலிப்பாய். (56567)

தகவல்:
**திருமதி சாந்தகுமாரி (மனைவி).**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முத்த வங்கியாளர் கௌரவிப்பு -2006

தற்பொழுது சேவையிலுள்ள யாழ்.மாவட்ட வங்கிகளைச் சேர்ந்த ஊழியர்கள் தமது வங்கிகளில் இருந்து இளைப்பாறியும் அன்றிவேறுவழிகளில் விலகியும் சென்ற மூத்த வங்கியாளர்களை (ஒய்வூதியம் பெறும் விதவைகள் உட்பட) கௌரவிக்கும் வரு டாந்த நிகழ்வானது எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (10.12.2006) நினைவு கூரப்பட வுள்ளது.

இடம்: யாழ்ப்பாணக் கல்லூரி மண்டபம்
(வர்த்தக வங்கிக்கு அருகில்)
464,ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

நேரம்: முற்பகல் 9 மணி

பிரதம விருந்தினர்: திரு இரா.குமாரவடிவேல்
(துணைவேந்தர்-யாழ்.பல்கலைக்கழகம்)

கௌரவிக்கப்படுபவர்களையும் கௌரவிப்பவர்களையும் இவ்விழாவில் பங்குகொண்டு மதியபோசன விருந்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றனர்.

ரி.ரகு
உப தலைவர்.

என்.சிவரத்தினம்
செயலாளர்.

குறிப்பு:- பங்குகொள்பவர்கள் தமது வருகை பற்றி இதுவரை அறிவிக்காவிடின் தயவுசெய்து செயலாளருக்கு அறிவித்து ஏற்பாடுகளுக்கு உதவி செய்யுமாறு வேண்டப்படுகின்றனர்.

வங்கியாளர் சங்கம்,
யாழ்.மாவட்டம்.

(சி/51465)

## இதய அஞ்சலி

### அமரர் கே.கணேசலிங்கம்

ஹாட்லிக்கல்லூரி பழைய மாணவர் மன்றக் கொழும்புக்கிளை உப புரவலரும் கொழும்பு மாநகராட்சி மன்ற முன்னாள் முதல்வரும், துணை முதல்வரும், தொழிலதிபரும், கணக்காளருமான **கனகசபை கணேசலிங்கம்** 04.12.2006 அன்று காலமானார்.

அமரருக்கு ஹாட்லியின் மைந்தர்கள் நாம் எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம். அன்னார் தமது இறுதிவரை தனது கல்வித்தாயை மறக்காமல், மறுக்காமல் கேட்டவற்றைச் செய்தவர்.

அமரரது இறுதி நிகழ்வுகள் 07.12.2006 பிற்பகல் 4 மணிக்கு கொழும்பில் நடைபெறும்.

ஆத்மா சாந்தி பெறுக!

ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர்
மன்றக் கொழும்புக்கிளை.

(சி.51483)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
02
07
1927



விண்ணில்
08
12
2003

### தீயோ சின்னப்பு செபமாலையம்மா தம்பதியினர்

உயிர்ப்பும் உயிரும் நானே
என்னில் விசுவாசம் கொள்பவர்
இறப்பிலும் வாழ்வார்.

ஊறணி,
காங்கேசன்துறை.

(56438)

பிரிவால் துயருறும்
பிள்ளைகள்.

## துயர் பகிர்கின்றோம்

எமதுபாடசாலையில் நீண்டகாலமாக ஆசிரியராகவும் பிரதி அதிபராகவும் கடமையாற்றி தற்போது தீவகக் கல்வி வலயத்தில்கணித பாட ஆசிரிய ஆலோசகராகப் பணியாற்றும் **ப.ஆரூரன்** அவர்களின் தந்தை

### அமரர் சரவணமுத்து பழனிநாதன்

அவர்களின் மறைவையிட்டு ஆழ்ந்த கவலையடைவதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/ வேலணை மத்திய கல்லூரி,
வேலணை.

(56526)

அதிபர்,ஆசிரியர்கள்,
கல்விசாராத ஊழியர்கள்,
மாணவர்கள்,
பா.அ.சங்கம்,ப.மா.சங்கம்.

## மரண அறிவித்தல்

### திருமதி நடேசு மாணிக்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியை)



முத்தட்டுமட வீதி, கோண்டாவில் மேற்கு கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட நடேசு மாணிக்கம் 06.12.2006 புதன்கிழமை காலமானார்.

அன்னார்காலஞ்சென்ற கனகரத்தினம் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும் நவமணியின் சகோதரியும் செல்லப்பா நடேசுவின்(ஓய்வு பெற்றஆசிரியர்) அன்பு மனைவியும் நிர்மலா (பொறியியலாளர் U.K.), சியமளா(நோர்வே) ஆகியோரின் தாயும் கெமுனு நாணயக்கார (பொறியியலாளர் U.K.), சண்முகப்பிரபு (நோர்வே)ஆகியோரின் மாமியும் டிலானி,பிரசன்னா, இந்துஜா, சஞ்சயன், விஜய ஆகியோரின்அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 11.12.2006 திங்கட்கிழமை லண்டனில் நடைபெறும்.இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

U.K.
0044 208 9075251

(56535)

தகவல்:G.நிர்மலா,S.சியாமளா
(மகள்மார்).

சர்வதேச
லயன்ஸ் கழகங்கள்
மாவட்ட 306B1 - 306B2
ஆதரவுடன்

மானிப்பாய் கோவில்பற்று
லயன்ஸ் கழகம் நடத்தும்

## சிக்குன் குனியா இலவச மருத்துவ முகாம்

09.12.2006 சனிக்கிழமை
மு.ப. 9.00 முதல் பி.ப. 1.00 வரை
இடம் : துரையைா மண்டபம்,
நவாலி றோட், ஆனைக்கோட்டை

10.12.2006 ஞாயிற்றுக்கிழமை
மு.ப. 9.00 முதல் பி.ப. 1.00 வரை
இடம் : நவாலி வடக்கு சனசமூக
நிலையம், மானிப்பாய்.
இடம் : சிந்மயாபாரதி வித்தியாலயம்,
சுதுமலை தெற்கு, மானிப்பாய்.

நோயாளர்கள் பரிசோதனை செய்யப்பட்டு இலவசமாக மருந்துகள் வழங்கப்படும்.

குறிப்பிடப்பட்டுள்ள நிலையங்களுக்கு அருகில் வசிக்கும் மருத்துவத்துறை சார்ந்தவர்களையும் மற்றும் லயன்ஸ்/லியோ கழக உறுப்பினர்களையும் இந்த மனிதாபிமான சேவையில் இணைந்து செயற்பட அன்புடன் அழைக்கின்றோம்.

லயன் R.வாசுதேவன்
செயலாளர்

லயன் M.மகேந்திரன்
தலைவர்

திட்ட ஒருங்கிணைப்பாளர்
லயன் செ.ஞானராஜா
மாவட்டத் தலைவர்(கிராமங்கள் பாதுகாப்பு)

(56540)

## THE ROYAL COLLEGE OF JAFFNA

தரம் 6இல் இருந்து O/L வரையான ஆங்கில வகுப்பு கள் ஆரம்பம் 11.12.2006, 4.30.p.m. A/L மேற்படிப்பு மற்றும் SPOKEN ENGLISH வகுப்புகள் நடைபெறுகின்றன. By:விக்கினேஸ்வரன் ஆச்சாரி, பிளாக் வீதி, சங்கானை.

"THE ROYAL IS THE BEST"

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர்
**தருமராஜா ஸ்ரீமுரளி**
அவர்களின் பாசமிகு தந்தை

### பொன்னையா தருமராஜா

(ஓய்வுபெற்ற சிறாப்பர், யாழ்.மாநகர சபை)

அவர்கள் 02.12.2006 சனிக்கிழமை இறைபதம் அடைந்த செய்தி அறிந்து பெரும் துயரடைகின்றோம். அவரது இழப்பால் துயரடைந்திருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆன்ம இளைப்பாற்றிற்காக இறைவனை இறைஞ்சுகின்றோம்.

(56521)

-பாடசாலைச் சமூகம்.

## பொருளியற் கல்லூரி

யாழ்ப்பாணம் இணுவில்
இருஇடங்களிலும்

A/L 2007, 2008 DAY
பொருளியல்
M.C. சுதாகரன் B.Com.(Hons)
சனி, ஞாயிறு
புதிய வகுப்புகள் ஆரம்பமாகி
நடைபெறுகின்றன.

## BARATHY

சித்தன்கேணி

புதிய வகுப்புகள்
தரம் 5 தொடக்கம் 11 வரை
நாளை ஆரம்பம்
09.12.2006 சனி 3 மணி
எமது தனித்துவமும் அதிதிறமையும் கொண்ட
ஆசிரியர் குழுவினால்

| | |
|---|---|
| விஞ்ஞானம்<br>திரு.தேவா<br>திரு.சனந்தன் | கணிதம்<br>திரு.எஸ்.சிவரூபன்<br>திரு.சிவா |
| தமிழ்<br>திரு.குகபரன்<br>திரு.தமிழ்மாறன் | ஆங்கிலம்<br>திரு.விஜயபாஸ்கர்<br>திரு.இராஜதுலசூரியர்<br>திரு.திலகர் |
| சமூகக்கல்வி<br>திரு.சுதன்<br>திரு.சிவபாலன் | சமயம்<br>திரு.தரன்<br>திரு.கோகுலன் |
| வர்த்தகம்<br>திரு.லோகேஸ்வரன் | சுகாதாரம்<br>திரு.சனந்தன் |

புலமைப் பரிசில் வகுப்பு - தரம் 5
திரு. கலாமோகன்

உங்கள் அனுமதியினை நாளையில்
இருந்து [illegible]

(56530)

## கண்ணீர் அஞ்சலி

பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பீட 2 ஆம் வருட மாணவனாகிய **கு.பத்மரூபன்** அவர்களின் பாசமிகு தந்தை

### பிரான்சிஸ் குணசீலன்

காலமானதையிட்டு ஆறாத்துயரில் மூழ்கியிருக்கும் அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ஆறுதல் கூறுவதோடு அன்னாரின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பொறியியல் பீட 2ஆம் வருட மாணவர்கள், பேராதனைப் பல்கலைக்கழகம்.

## முதலாம் வருட நினைவஞ்சலி



வழிந்தோடும் விழிநீர்

### அமரர் மருதப்பு கனகசபை

தோற்றம்
11.04.1918

மறைவு
19.12.2005

வருடம் ஒன்றானாலும் வழிகின்றது விழிநீர் அப்பா நெஞ்சில் எழுதிவைத்த உங்கள் நினைவுகள் நிழலாக உள்ளத்தில் நிற்கின்றது. உங்கள் ஆத்மா சாந்தியடைய பத்திரகாளி அப்பாளைப் பிரார்த்திக்கும்

295/48, K.K.S Road,
Jaffna.

மனைவி,
மகாலெட்சுமி (மகள்-ஆசிரியை).
புங்குடுதீவு - 10.

## மரண அறிவித்தல்கள்

### பொன்னம்பலம் வெற்றிவேலு



வேலணை வடக்கு, பன்னம்புலத்தைச் சேர்ந்தவரும் தற்போது 21, மாரியம்மன் வீதி,திருநெல்வேலியில் வசித்தவருமான பொன்னம்பலம் வெற்றிவேலு நேற்று(07.12.2006) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, பெரியநாயகி ஆகியோரின் அன்புக் கணவரும் காந்தமூர்த்தியின் (சிரேஷ்ட உதவி நிதியாளர், யாழ்.பல்கலைக்கழகம்) அன்புத் தந்தையும் திருநிலைநாயகி அம்மாவின் அன்பு மாமனும் பேரம்பலம், காலஞ்சென்றவர்களான இராசமணி, மனோன்மணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான அன்னலட்சுமி, கணபதிப்பிள்ளை, செல்லையா ஆகியோரின் மைத்துனரும் ஆருகன்(கனடா), பிரணவமலர் (பல்கலைக்கழகம், வவுனியா) சுபானி, தவகிருபா(பிரதேச செயலகம், செட்டிகுளம்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 07.12.2006வியாழக்கிழமை திரு நெல்வேலியில் நடைபெற்றது.இந்த அறிவித்தலை உற்றார், உறிவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

21,மாரியம்மன் வீதி,
திருநெல்வேலி.

(56533)

தகவல்:
வெ.காந்தமூர்த்தி
(யாழ்.பல்கலைக்கழகம்).

### நாகமுத்து ரவிச்சந்திரன்

(ஆசிரியர்-யாழ்.எழுதுமட்டுவாழ்,அ.த.க.பாடசாலை)



அல்லாரையை வதிவிடமாகவும் நாவற் காடு, வரணியை வதிவிடமாகவும் கொண்ட யா/எழுதுமட்டுவாழ் அ.த.க.பாடசாலையின் ஆசிரியருமான நாகமுத்து ரவிச்சந்திரன் அவர்கள் (6.12.2006) புதன் கிழமை காலமானார்.

அன்னார் திலகவதியின் அன்புக் கணவரும் (மிருசுவில் அ.த.க.,குடமியன் அ.த.க. பாடசாலைகளின் இசைஆசிரியர்), நாக முத்து-தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் சதாசிவம் (ஓய்வுபெற்ற கிராம உத்தியோகத்தர்)-தங்கமணி தம் பதியரின் அன்பு மருமகனும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் (07.12.2006) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றன.

இந்தஅறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

நாவற்காடு,
வரணி.

(56528)

தகவல்:
திருமதி திலகவதி ரவிச்சந்திரன்
(மனைவி).

### பரமகுரு நவரத்தினம் (K.P.N.சந்திரன்)



சாவகச்சேரி, கட்டுக்காணி வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பரமகுருநவரத்தினம்(சந்திரன்) 06.12.2006 புதன்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பரமகுரு மற்றும் நாக ரத்தினம் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வருமாவார்

அன்னாரது இறுதிக்கிரியை பற்றிய தகவல்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கட்டுக்காணி வீதி,
சாவகச்சேரி.

(56526)

தகவல்:
நாகரத்தினம்(தாய்).

### சின்னர் சின்னையா

பலாலி கிழக்கைப் பிறப்பிடமாகவும் ஆவரங்கால் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னர் சின்னையா நேற்று (06.12.2006) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னர் - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் அமரர்களான இளையபிள்ளை - கதிரிப்பிள்ள தம்பதியரின் அன்பு மருமகனும் அமரர் ஆச்சிப்பிள்ளையின் அன்புக் கணவரும் தங்கம், செல்லம், தங்கரத்தினம், புவனேஸ்வரி, மகேஸ்வரி, புஸ்பராணி ஆகியோரின் பாசமிகு தந்தையும் கனகரத்தினம், கந்தையா, கந்தசாமி, செல்வரத்தினம், குணரத்தினம், குணசிங்கம் ஆகியோரின் மாமனும் ஜேர்மனைச் சேர்ந்த பாலகிருஸ்ணன் - சறோஜாதேவி, பாமா -யோகேஸ்வரன் மற்றும் நித்தியபாமா - நந்தகோபாலன், இராமகிருஸ்ணன், பாசமலர் - கஜேந்திரன், ஸ்ரீகிருஸ்னன், பவிலரசு, இராதாகிருஸ்னன், செல்வக்கந்தராணி -ஜெகதீசன், நல்லைக்கந்தராணி -கணேசநிதி(சுவிஸ்), மாவைக் கந்தராணி (கரவெட்டிப் பிர ச சபை)- நிமலன், செந்தமிழ்க் கந்தராசா(லண்டன்), செல்வக் கந்தராசா (லண்டன்), மதுராம்பிகை(3ஆம்வருடம், கலை, யாழ். பல்கலை), லண்டனைச் சேர்ந்த செல்வச்சந்திரன் -அம்பிகாதேவி, தவச்சந்திரன் - தங்கரதி, நவச்சந்திரன் மற்றும் ராதிகா - மனோகரன்(கனடா), சருசிகா, கலாநிதி (4ஆம் வருடம் கலை, யாழ். பல்கலை), கமலினி, கலாரஞ்சினி, கம்சிகா, தஜரூபன்,நிறோஜன், நிறோஜினி, றஜோஜன், றிஜோஜன், லோஜிதன் ஆகியோரின்பாசமிகு பேரனும் ஜேர்மனைச் சேர்ந்த பகிதா, சகிதா, கீர்த்தனா, பிரசன்னா மற்றும்சகானா, நளாயினி, நதீசன், மதீசன், லண்டனைச் சேர்ந்த (அஜன், அஜின், சசிதன்) ஆகியோரின் அன்புப் பூட்டனும்தெய்வானைப்பிள்ளை, ஆச்சிப்பிள்ளை (அமரர்), செல்லப்பா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (06.12.2006) புதன்கிழமை பிற்பகல் 4 மணியளவில் நடைபெற்று, ஆவரங்கால் இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சந்தை வீதி,
ஆவரங்கால் மேற்கு,புத்தூர்.

(56496)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேவை நலன் நயப்பு விழா

11.06.2006 இல் ஓய்வுபெற்ற பகுதித் தலைவர்



திருமதி

**ரு.கிருஷ்ணமாலா**

(S.L.T.S-1)

அவர்களுக்கு

காலம் : இன்று (08.12.2006) வெள்ளி மு.ப. 8.30

இடம் : பாடசாலை மண்டபம்

பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் தவறாது கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை. (56514)

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் பா.அ.சங்கம், ப.மாணவர் சங்கம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

வட அல்வை இளங்கோ சனசமூக நிலைய போசகரும் யா/கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய ஆசிரியருமான

**முருகேசு இராசநாயகம்** *B.A, Dip. in.Edu, M.Ed*

(மு.அநாதரட்சகன்)

அவர்கள் யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் முறைசாராக் கல்விப் பிரிவு உதவிக்கல்விப்பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றுள்ளமையைப் பாராட்டுவதுடன் அவர் கல்வித்துறையில் மேலும் உயர்வடைய வாழ்த்துகின்றோம்.

*வாழ்த்துவோர் :*

இளங்கோ சனசமூக நிலையம்,
அல்வாய் வடக்கு.

(55978)

## நெஞ்சில் சுமைகளோடு முதலாவது ஆண்டு நினைவஞ்சலி



**வைரமுத்து இளையதம்பி**

| தாய் | நோய் |
|---|---|
| கொண்டுவந்தது | கொண்டு சென்றது |
| 14-01-1927 | 19-12-2005 |

திதி:08.12.2006

ஊரோடு ஒத்து வாழ்ந்தீர்
உறவோடு கலந்து மகிழ்ந்தீர் - இன்று
வேரோடு விருட்சமொன்று
விறகாகிப் போனதையா! அந்தோ!
ஆரோடு சொல்லியழுவோம்?
எவரோடு அமைதி பெறுவோம்?
நீரோடும் எமது விழிகள் - உம்மை
நாளெல்லாம் பூசிக்குமையா!

*இல. 10 கேசாவில் வீதி,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.*

(56504)

தகவல்:
குடும்பத்தினர்.

## Request for Quotation

United Nations Development Programme. Sri Lanka invites Request for Quotations (RFQ) from the suitable Implementing Partners for the implementation of alternative income generation activities for the 1000 youths live in Temporary accommodation centres in Jaffna.

The objective of this project is to provide support to 1000 Internally Displaced People youths reside in Temporary Accomodation Centres to increase their family income.

**The Scope of the Assignment:**

**Assignment -I:** Creating awareness on alternative income generation activities and its important through business counseling among IDP's in TAC.

**Assignment - II:** Identify the interested youths and support them to develop a feasible business plan and assess the skill training.

**Assignment - III:** Providing required skill training

**Assignment - IV:** Providing required inputs to the selected beneficiaries to start their IGA(income generation activities)

**Assignment - V:** Monitoring the income generation activities based on the milestone provided in the business plan.

**The interested parties will be able to submit the following information in order to prove their eligibility to apply:**

- Document providing evidence of registration as NGO.
- Brief description about competency to provide the service including the availability of qualified staffs to provide timely services.
- The experience in working in the areas of: alternative income generation activities,IDP's in welfare centers and provision of skill training.
- Financial Management capacity.

The Terms of Reference is available on request
The interested parties are encouraged to contact:

1. **Head of Office,**
   **UNDP,**
   **121, Temple road, Jaffna**
   **T.P: 0212222277 and 0212225776**
   **Fax: 0212223094**

Applicants will be responsible for any cost or expenses incurred for preparation or delivery of required documents and UNDP will not be reimbursing any expenses in this regard.

UNDP reserves the right to reject any Request for Quotation submitted by interested parties, without assigning any reasons thereof.

## தவறிவிட்டது

ஜெயகுமார் சாந்தினி என்பருடைய தேசிய அடையாள அட்டை (715062810V) சுன்னாகத்திற்கும் மானிப்பாய்க்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் உடுவில் டச்சு றோட், காந்தி பேக்கரிக் கடையில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (56499)

## சிறு விமான சேவை

யாழ். - கொழும்பு விமான சேவைகள்

*தனியார் நிறுவனத்தின் நான்குபேர் பயணிக்கத்தக்க சிறு விமான சேவை உத்தரவாதத்துடன் நடைபெறுகின்றது. உடனடிப் பயணம்.*

தொடர்பு:- தொ.பே.: **0112721789, 0114964994, 0785788811, 0785325501.**

(சி/50463)

## முக்கிய அறிவித்தல்

மரணச்சடங்கு, அந்தியேட்டி, அபரக்கிரியைகள் தேவைக்கு நாடவேண்டிய முகவரி:

சோ.சிவகுமார் குருக்கள்
நெடுங்குளம் வீதி,
நெடுங்குளம்,
கொழும்புத்துறை. (56510)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை தமிழ் ஆசிரியை
திருமதி இந்திராணி பாலச்சந்திரன்
அவர்களின் அன்புக் கணவர்

**வைத்திலிங்கம் பாலச்சந்திரன்**

அவர்களின் பிரிவினால் (05.12.2006) துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், கல்வி சாரா ஊழியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம்.

யா/தாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலை, கொக்குவில்.

## கண்ணீர் அஞ்சலி

தீவகக் கல்வி வலயத்தில் கணிதபாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகராகப் பணியாற்றிவரும் ப. ஆரூரன் அவர்களின் அன்புத் தந்தை

**சரவணமுத்து பழனிநாதன்**

05.12.2006 அன்று காலமானார். அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நலன்புரிச் சங்கம்,
தீவகக் கல்வி வலயம். (56516)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக ஆசிரியர்
க.செந்தில்வடிவேல்
அவர்களின் அன்புத் தந்தை

**சின்னையா கணேசு**

அவர்களின் மறைவையிட்டு துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
வேம்படி மகளிர்
உயர்தர பாடசாலை. (சி.51481)

## கண்ணீர்ப் பூக்கள்

எமது சக ஆசிரியை
திருமதி ஜெயபாலன்
அவர்களின் அன்புச் சகோதரன்

**சிவபாதசுந்தரம் ஞானேஸ்வரன்**

அவர்களின் மறைவையிட்டு துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஆசிரியர் கழகம்,
வேம்படி மகளிர்
உயர்தர பாடசாலை.

## கண்ணீர் அஞ்சலி

எமது சமூக நலன்புரித் திணைக்களப் பணிப்பாளர் (வடக்கு - கிழக்கு மாகாணம்)
அவர்களின் அன்புத் தந்தை

**பொன்னுச்சாமி பாலவடிவேல்**

(ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி, சட்ட உசாவுநர், சட்டப்பிரிவு வடக்கு - கிழக்கு மாகாணம்.)

அவர்கள் 04.12.2006 காலமானதையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிக்கின்றோம்.

வடக்கு - கிழக்கு மாகாண
[illegible] உத்தியோகத்தர்கள்,
[illegible]

(56511)

## G.A.Q (பேராதனை) வெளிவாரி

- மேற்படி பல்கலைக்கழகத்தினால் பதிவுகள் கோரப்பட்டுள்ளன.
- A/L இல் கணிதம், விஞ்ஞானம், வர்த்தகம், கலை ஆகிய பாடங்களில் மூன்று பாடம் சித்தி அடைந்தவர்களும் பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் விண்ணப்பிக்கத் தகுதி உடையவர்கள் ஆகும்.
- பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினூடாக நடைபெறுகின்றன.
- புதிய விரிவுரைகள் யாவும் ஆரம்பமாகிவிட்டன.

விவரங்களுக்கு - *நிர்வாகி* S.அருள்நங்கை

**புதிய உயர் கல்லூரி**

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம். (56509)

## இதய அஞ்சலி

எமது வித்தியாலய ஆசிரியை
செல்வி ஆ.தர்மவதனியின் அன்புத் தாய்

**தங்கம்மா ஆறுமுகராஜா**

அவர்களின் திடீர் மறைவையிட்டு எமது இதயம் நெகிழ்ந்த அஞ்சலியைத் தெரிவிப்பதோடு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துஅன்னாரது ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*நவாலி, மானிப்பாய்.* (56505)

நவாலி மகாவித்தியாலய சமூகம்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 21 | 07 |
| 08 | 12 |
| 1928 | 2005 |



**அமரர் முருகேசு கனகரெத்தினம்**

பூவுலகில் உன்சேவை போதும் புண்ணியனே என்று வஞ்சகமாய் வானுலகோர் வலிந்து இழுத்தனரோ? இன்னும் உன் சேவை இங்கே தான் தேவை இறங்கி வாராயோ?

*95, சிவன் பண்ணை வீதி,*
*கொட்டடி, யாழ்ப்பாணம்.* (56454)

-குடும்பத்தினர்.

## இரண்டாம் ஆண்டு நினைவுநாள்



அமரர்

**ந.சிவபாதம்**

(புத்தொளி)

(அகில இலங்கை சமாதான நீதிவான், மூத்த எழுத்தாளர், முன்னாள் அதிபர்)

| உதயம் | அஸ்தமனம் |
|---|---|
| 05-12-1932 | 31-11 2004 |

திதி: 08.12.2006

தன் மிடுக்கோடு தமிழன் இங்கு என்றும் வாழ ஏற்ற
வழிகளில் இறங்கி உழைத்த உறங்கா நெஞ்சன்
நல்லாசிரியன், நல்வலு அதிபன், மாண்பணிபூக்கும் வாண்மை விருத்தி
ஆசிரியர்கள் தேசுற ஈட்டும் சேவைக்கால வகுப்புகள்
நடத்திய நாவல்லவனாய் நயம்மிகு இலக்கியப் படைப்பாளியாகப்
பத்திரிகைத் துறை வாழ்த்தும் ஒருவனாய், தொழிற்சங்க வாதியாய்,
நவமிகு நூல்பல நல்லெழுத்தாளனாய் சிவபாதம் என்னும்
தீரன் புத்தொளி ஒளிர்ந்தவன்! அவனே ஓய்ந்தவனாகக்
கழிந்ததோ இரண்டு ஆண்டு காலம். எனினும் விண்ணிலும்
எங்கள் கண்ணிலும் நெஞ்சிலும் வித்தக விளக்காய்
புத்தொளி விளங்குவான்.

*'யதுகிரி',*
*புளியங்கண்டு லேன்,*
*ஆனைக்கோட்டை* (56497)

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

## 31ஆம் நாள் நினைவலைகள்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 05 | 08 |
| 01 | 11 |
| 1931 | 2006 |



திருமதி **செல்லத்தம்பி இலஷ்சுமி** (சின்னமணி)

கடந்த 08.11.2006 புதன்கிழமை வட அல்வையில் (கொத்தலாவோடை) காலமான திருமதி.செல்லத்தம்பி இலஷ்சுமி (சின்னமணி) அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று 08.12.2006 வெள்ளிக்கிழமை காலை 6.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கிரியைகளிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு தங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*'தாய்நிழல்',*
*அல்வாய் வடக்கு,*
*அல்வாய்.* (56491)

தகவல்:
மக்கள், மருமக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல்: 222 9933, 222 3837 - 222 9944

## நுண்ணியதாக நோக்கப்பட வேண்டியது

சுமார் ஐந்து வருடங்களாக நீக்கப்பட்டிருந்த பயங்கரவாதத் தடைச் சட்டம் நேற்றுமுன்தினம் தொடக்கம் மீண்டும் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றது.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனா காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டதில் இருந்து, சிறு சிறு இடைவெளிகளுடன் இந்தச் சட்டத்தினுடனேயே இலங்கை மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

காலத்துக்குக் காலம் பதவிக்கு வரும் அரசுகள் இந்தச் சட்டத்துக்கு பல கடும் விதிகளைச் சேர்த்துப் புதுப்பித்து வந்தன. அதேவகையில் மஹிந்த அரசும், கடந்த புதன்கிழமை பல புதிய விதிகளைச் சேர்த்து பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நாடு முழுவதிலும் நடைமுறைக்குக் கொண்டுவந்திருக்கிறது.

நாட்டின் அமைதிக்கும் அதன் வளர்ச்சிக்கும் வகை செய்வதற்காகப் புதிய புதிய சட்டங்கள் நடைமுறைப்படுத்துவதும் காலத்தேவைக்கு ஏற்ப அவ்வப்போது பழையன திருத்தப்படுவதும் எல்லா நாடுகளிலும் நடைபெறுவதுதான். அதனைத் தவறு என்று சொல்வதற்கில்லை; சொல்லமுடியாது.

ஆனால் ஒரு சட்டம் அடிக்கடி திருத்தப்படுகிறது எனின், அது போதிய வீரியத்துடன் தயாரிக்கப்படவில்லை அன்றேல் அது உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை என்றுதானே அர்த்தம்?

புதன்கிழமை திருத்தப்பட்ட சட்டத்தை அந்த வகைக்குள் சேர்க்கமுடியுமா என்பது ஆழமாக ஆராயப்படவேண்டியதே. ஏனெனில் சட்டத்தில் உள்ள சரத்துக்கள் வழங்கும் அதிகாரங்களை மிஞ்சிய வகையில் அது பல காலமாக நடைமுறைப்படுத்தப்பட்டுவந்தது.

இது தமிழ் மக்களுக்கு கடந்த பல வருடங்களாக ஏற்பட்ட அனுபவம். பயங்கரவாத நடவடிக்கைகளில் சம்பந்தமே இல்லாத தமிழ் இளைஞர்கள், நீண்டகாலமாக பூஸா போன்ற தடுப்பு முகம்களில் அடைத்து வைக்கப்பட்டு, பல வருடங்களுக்கு விசாரணைகள் ஒத்திவைக்கப்பட்டு அல்லது விசாரணைகளே நடத்தப்படாமல் அவர்கள் நரக வாழ்வை அனுபவித்தது வரலாறு.

சமாதானத்தை அடைதல், தேசியப்பிரச்சினைக்கு தீர்வு ஒன்றைக் காணுதல், சமூக வாழ்வுக்குத் தேவையான அத்தியாவசிய சேவைகளை வழங்குதல் மற்றும் பேணுதல் ஆகியவற்றுக்குக் குந்தகமாக மேற்கொள்ளப்படும் பயங்கரவாதச் செயற்பாடுகளைத் தடுப்பதற்காகவே பல புதிய விதிகள் சேர்க்கப்பட்டு இம்முறை சம்பந்தப்பட்ட சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருப்பதாக அரசு அறிவித்திருக்கின்றது.

புதிய ஒழுங்குவிதிகள், ஐக்கிய நாடுகள் சபைத் தீர்மானம் மற்றும் பயங்கரவாதத்தை தடுத்தல் மற்றும் அடக்குதல் தொடர்பான சர்வதேச ஒப்பந்தங்கள் மற்றும் சட்டக் கருவிகளினால் இலங்கை தொடர்பாக வெளியிடப்பட்ட கடப்பாடுகளுக்கு வலுவூட்டியே நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் அரசாங்கம் விளக்கம் கொடுத்துள்ளது.

அந்த வகையில், இது மக்களுக்கு, குறிப்பாகத் தமிழ் மக்களுக்குப் பாதகம் விளைவிக்காது என்று சொல்ல முயற்சிக்கிறது அரசு.

ஆனால், பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ், வருடக் கணக்காக வாழ்ந்து அதன் கோரவிளைவுகளை அனுபவித்தவர்கள் தமிழ்மக்கள்.

அதனால், மீண்டும் பயங்கரவாதத் தடைச்சட்டம் நடைமுறைக்கு வந்திருப்பதால், ஐந்து வருட இடைவெளியின் பின்னர் முந்திய 'யுகத்துக்கு' திரும்பிச் செல்ல நேரிடப்போகிறதே என்ற அச்சம் அவர்கள் மத்தியில் எழுந்துள்ளது. அது தவிர்க்க முடியாதது; வேண்டாத பயம் என்று சொல்லத்தக்கதுமல்ல.

கடந்த சுமார் ஐந்து வருட சமாதான காலத்திற்குப் பின்னர் மீண்டும் நடைமுறைக்கு வந்தமையால் மேற்படி சட்டம் சமாதானப் பேச்சு முயற்சிகளைப் பாதிக்கமாட்டாது. அது மேலும் வலுப்பெறவே செய்யும் என்று அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

பயங்கரவாத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தி அமைதி முயற்சிகளை முன்னெடுப்பதற்காக காலத்திற்கேற்ப நடவடிக்கைகளை எடுக்கவேண்டியுள்ளது. அதற்காகவே வலுவின்றிக் காணப்படும் பயங்கரவாதத் தடைச்சட்டம் புதிய துணை விதிகளுடன் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இவ்வாறு பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க அறிவித்தார்.

பிரதமர் வெளியிட்ட கருத்தே, ஜனாதிபதியினதும் அரசாங்கத்தினதும் கருத்து என்பதில் ஐயமில்லை. ஆனால், தர்க்க ரீதியில் நோக்கினால், முந்தைய பதிவுகளை வைத்துப் பார்த்தால், பயங்கரவாதத் தடைச் சட்ட அமுல் அமைதிக்கு வழி செய்வதை விட - உதவுவதை விட - எதிர்மறையாக முடியும் என்றே கொள்ளவேண்டும்.

நடைமுறையில் உள்ள சமாதானத்துக்கு வகை செய்திருப்பது அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான 2002 பெப்ரவரி 22 இல் கைச்சாத்தான போர் நிறுத்த ஒப்பந்தம்; அதாவது புரிந்துணர்வு ஒப்பந்தம்.

கடந்த நான்கரை வருடங்களுக்கு மேலாக அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே முந்திய அரசும் இப்போதைய அரசும் சமாதானப் பேச்சுக்களை விடுதலைப் புலிகளுடன் நடத்தின.

அந்த ஒப்பந்தத்தின் 2.12 சரத்து -

தேடுதல் நடவடிக்கைகளும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழான கைதுகளும் நடைபெறாதென இரண்டு தரப்பினர்களும் இணங்குகின்றார்கள். கைதுகள் உரிய சட்ட முறைப்படி குற்றவியல் சட்டக்கோவையின் பிரகாரம் நடைபெறவேண்டும் -

என்று தெரிவிக்கின்றது.

ஆகையால், பயங்கரவாதத் தடைச் சட்டம் புதன்கிழமை தொடக்கம் நடைமுறைக்கு வந்திருப்பதால் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் மேற்படி சரத்து கேள்விக்குரியதாகிறது.

ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட இரண்டு தரப்புகளில் ஒன்றான விடுதலைப் புலிகளைக் கலந்தாலோசிக்காமலே அவர்களின் இணக்கத்தைப் பெறாமலே பயங்கரவாதத் தடைச் சட்டம் அமுலுக்குக்கொண்டு வரப்பட்டுள்ளது.

இது போர்நிறுத்த ஒப்பந்தத்தை அப்பட்டமாக மீறும் செயற்பாடு. சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த, மக்கள் அமைதிக் காற்றைச் சுவாசிக்க வழிசெய்த ஒப்பந்தத்தை, ஒருதலைப்பட்சமாக முறித்துக்கொண்டதற்கு ஒப்பானது. இத்தகைய பின்னணியில் மேற்சொன்ன இருதரப்புகளுக்கும் இடையில் சமாதான முயற்சிகள் தொடர்வதற்கான கதவும் தாழிடப்பட்டுவிட்டதாகவே கருதலாம்.

போர்நிறுத்தம் உயிருடன் பிழைக்கவேண்டுமானால், அதன் 2.12 ஆம் சரத்துத் திருத்தப்படவேண்டும். அதாவது போர் நிறுத்த ஒப்பந்தத்தில் மாற்றம் செய்யப்படவேண்டும்.

அது சாத்தியமானதா, இலகுவானதா என்ற கேள்வி நெடிதாக உயர்ந்து நிற்கிறது.

நாட்டின் சகல அரசியல் தரப்புகளாலும் ஆழ்ந்து ஆராய்ந்து நுண்ணியதாக நோககபபடவேண்டிய விடயம் இது.

## யாழ்.நகர பஸ் நிலையத்தில் ஒரே நேரத்தில் 7 பஸ்கள் தரிக்கும்

### பயணிகளை ஏற்றிச் செல்ல ஏற்பாடு

யாழ்ப்பாணம்,டிசெ.8

யாழ்.பஸ் நிலையம் பண்ணைக்கு இடமாற்றம் செய்யப்பட்ட போதும், ஒரே நேரத்தில் 7 தடங்களில் செல்லும் பஸ்கள் பஸ் நிலையத்தில் இருந்து பயணிகளை ஏற்றிச் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

அந்த ஏற்பாட்டின் பிரகாரம் -

ஏழு தடங்களில் சேவையில் ஈடுபடும் பஸ்கள் மட்டும் யாழ்.நகர பஸ் நிலையத்தில் தரித்து நின்று பயணிகளை நேற்று ஏற்றிச் சென்றது.

அதேவேளை வெளியிடங்களில் இருந்து நகருக்கு வரும் பஸ்கள் பயணிகளை பஸ் நிலையத்தில் இறக்கி விட்டு பண்ணையில் தரித்து நிற்கின்றன.

பண்ணையிலிருந்து பஸ் சேவையை ஆரம்பிப்பதில் உள்ள சிக்கல்கள் குறித்து படை அதிகாரிகளின் கவனத்திற்கு போக்குவரத்துச் சபை அதிகாரிகள் கொண்டுவந்திருந்தனர்.

அது தொடர்பாக நடைபெற்ற பேச்சுக்களில் ஏற்பட்ட இணக்கத்தை அடுத்து ஏழு பஸ்கள் ஒரே நேரத்தில் யாழ்.பஸ் நிலையத்தில் தரித்து பயணிகளை ஏற்றிச் செல்லும் நடைமுறை நேற்று ஆரம்பமானது. (அ-1-79)

## தமிழ்க் குடும்பஸ்தர்கள் இருவர் கிண்ணியாவில் சுட்டுக் கொலை!

திருகோணமலை - கிண்ணியாப் பகுதிக்கு விறகு வெட்டச் சென்ற தமிழ்க் குடும்பஸ்தர்கள் இருவர் இனந்தெரியாத ஆயுததாரிகளால் நேற்றுமுன்தினம் இரவு சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

காட்டிற்கு விறகு வெட்டுவதற்கென மூன்று தமிழர்கள் கிண்ணியாப் பகுதிக்குச் சென்றனர் என்றும் - இவர்களில் உப்புவெளிப் பகுதியைச் சேர்ந்த கே. சிவானந்தன் (வயது-57) மற்றும் ஏ. சிங்கராசா (வயது-36) ஆகிய இருவருமே இனந்தெரியாத ஆயுததாரிகளின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி மரணமாகினர் என்றும் - தகவல்கள் தெரிவிக்கின்றன.

செல்லையா சுந்தரலிங்கம் (வயது-50) என்பவர் இந்தச் சம்பவத்தின்போது பலத்த காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்றும் -

உயிரிழந்த இருவரின் சடலங்களும் பிரேத பரிசோதனைக்காக திருமலை பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

## பயணிகள் கப்பல் சேவை மீண்டும் நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,டிசெ.8

கடற்கொந்தளிப்புக் காரணமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த திருமலை - காங்கேசன்துறை பயணிகள் கப்பல் சேவை நேற்று மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சிவில் நிர்வாக அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்றுக்காலை யாழ்ப்பாணத்திலிருந்து 300 பயணிகள் தெல்லிப்பழைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர் என்றும் -

இவர்கள் இன்று திருமலைக்கு அழைத்துச் செல்லப்படுவர் என்றும் - மேலும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் ஒரு முறை பயணிகள் கப்பல் சேவையை நாளை நடத்துவதற்கு ஏற்பாடாகியுள்ளது. எனினும் கடற்கொந்தளிப்பு இருக்கும் பட்சத்தில் சேவை இடம்பெறாது எனவும் - தெரிவிக்கப்பட்டது. (அ-1)

## அதிகாலையில் ஆயுதக் குழுவைக் கண்டு அஞ்சி ஓடிய சிறுமி மீது துப்பாக்கிச் சூடு!

### யாழ். கல்வியங்காடு பகுதியில் சம்பவம்

யாழ்ப்பாணம், டிசெ.8

அதிகாலை வீட்டின் பின்புறம் இயற்கைக்கடன் கழிக்கச் சென்ற சிறுமி ஒருத்தி துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிக் காயமடைந்தார்.

யாழ்ப்பாணம், கல்வியங்காடுப் பகுதியில் - புதிய செம்மணி வீதியில் - இந்தச் சம்பவம் நேற்று விடிகாலை 2 மணியளவில் இடம்பெற்றது. இச் சூட்டில் காலில் காயமடைந்த சிறுமி யாழ். மருத்துவமனையில் சிகிக்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

துப்பாக்கிகள், கத்திகள், பொல்லுகளுடன் சுமார் 30 பேரடங்கிய கும்பல் ஒன்று இரவுவேளை அப்பகுதியில் நடமாடியது என்று கூறப்படுகிறது.

குறிப்பிட்ட சிறுமி அதிகாலை எழுந்து இயற்றைக் கடன் கழிப்பதற்காக வீட்டின் பின்புறம் தனியே சென்றிருக்கிறார். அப்போது அந்த ஆயுதக் குழுவினரைக் கண்டிருக்கிறார். அச்சத்தால் திகைத்துப்போன சிறுமி அங்கிருந்து வீட்டை நோக்கி ஓடியவேளை அவரை நோக்கிச் சுடப்பட்டிருக்கிறது. இதனால், சிறுமிக்குக் காலில் காயம் ஏற்பட்டது.

ஆயுதக் குழுவினர் பின்னர் வீட் டின் வேலியைப் பிரித்துக் கொண்டு வெளியேறிச் சென்றுள்ளனர்.

ஆயுதக் குழுவினர் யார், அவர்கள் என்ன நோக்கத்துக்காக அப்பகுதியில் வந்து மறைந்திருந்தனர் என்பது தெரியவில்லை. இந்தச் சம்பவத்தால் அப்பகுதிக் குடியிருப்பா ளர்கள் பீதி அடைந்துள்ளனர்.

## வன்னியில் இருந்து 19 மீனவர்கள் நேற்று பாசையூர் வந்தனர்

குருநகர்,டிசெ.8

பாசையூரில் இருந்து குடாக் கடலுக்கு கடந்த ஓகஸ்டில் கடற்றொழில் செய்வதற்கு சென்று இதுவரை திரும்பாமலிருந்த கடற்றொழிலாலர்களில் 19 பேர் குடாக்கடலில் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள மண்டைக்கிளாறு எனுமிடத்திலிருந்து நேற்றுக் காலை குடாக்கடலூடாக தமது வள்ளங்களில் சொந்த இடம் வந்து சேர்ந்தனர்.

தாம் இதுவரை காலமும் மண்டைக் கிளாறில் தங்கியிருந்து கடற்றொழிலில் ஈடுபட்டதாகத் தெரிவித்தனர். தம்மை பாசையூருக்கு அனுப்பிவைக்குமாறு அங்குள்ள பல நிறுவனங்களிடம் கோரிய போதிலும் பயன் கிடைக்கவில்லை என்றும், விடுதலைப் புலிகளுக்கு அறிவிக்காமலே தாம் புறப்பட்டு வந்ததாகவும் தெரிவித்தனர்.

மண்டைக் கிளாறு கடற் பகுதியில் இருந்து புதன்கிழமை இரவு 11 மணியளவில் தமது ஏழு வள்ளங்களில் பாசையூர் நோக்கி கடற் பகுதியூடாகப் புறப்பட்டதாகவும் நடுக்கடல் நோக்கித் தமது படகுகளை செலுத்தி நேற்று அதிகாலை 5 மணியளவில் குடாக்கடலில் உள்ள முகத்துவாரம் பகுதியை அடைந்து அங்கு தரித்து நின்றனர்.

பாசையூர் புனித அந்தோனியார் கடற்றொழிலாளர் சங்கத்தினருக்கு அறிவித்து பங்குத்தந்தை வண.பிதா மைக்கல் சௌந்தரநாயகம், வண.பிதா பாலதாஸ் பிராயன், பாசையூர் பங்குத் தந்தை வண.பிதா ஸ்ரனிஸ், பாசையூர் திருக்குடும்ப கன்னியர் மடத்தின் அருட் சகோதரி ஆகியோர் இராணுவ முகாம் பொறுப்பதிகாரியுடன் தொடர்பு கொண்டதைத் தொடர்ந்து தம்மை குடும்பங்களுடன் மீண்டும் சேர்ந்து கொள்ள படையினர் அவர்களை அனுமதித்தனர்.

தமது வள்ளங்களில் வெள்ளைக் கொடிகள் பறக்கவிட்டவாறே பாசையூருக்குத் திரும்பி வந்தனர்.

பாசையூரைச் சேர்ந்த ஏழு மீனவர்கள் இன்னும் இங்கு வரவேண்டி உள்ளதாக பாசையூர் புனித அந்தோனியார் கடற்றொழிலாளர் சங்கச் செயலாளர் ஜி.டேமியன் தெரிவித்தார். (அ-51)

## ஆசிரியர் செயலமர்வுகள்

யாழ்ப்பாணம்,டிசெ.8

யாழ்.வலயப் பாடசாலைகளில் தரம் 5 கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் உடற்கல்வி பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்குமான சதுரங்கப் போட்டி தொடர்பான செயலமர்வு நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்.ஆசிரியர் வள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் விளையாட்டு உபகரணங்களுடன் செயலமர்வுக்கு வருகை தருமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் வி.ரி. செல்வரத்தினம் கேட்டுள்ளார்.

* * *

யாழ்ப்பாணம்,டிசெ.8

யாழ்.கல்வி வலயத்தில் இறுதியாக நடைபெற்ற சேவைக் கால பயிற்சியில் பங்கு பற்றிய ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்.ஆசிரியர் வள நிலையத்தில் நடை பெறவுள்ளது. (202)

## சோனக தெருவில் பங்கீட்டு அட்டை மீளாய்வு

யாழ்ப்பாணம்,டிசெ.8

யாழ்.பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சோனக தெரு தெற்கு (ஜே/86), சோனக தெரு வடக்கு (ஜே/87), புதிய சோனக தெரு (ஜே/88) ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளுக்கான பங்கீட்டு அட்டைகளின் மீளாய்வு நாளை சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (1-202)

## நாளை

கார்த்திகை 23
சனிக்கிழமை
09.12.2006
திதி : பஞ்சமி
பின்னிரவு: 05.37
நட்சத்திரம் : பூசம்
பிற்பகல் : 04.20
சுபநேரம் : 03.18 - 04.48
ராகுகாலம் : 09.18 - 10.48

## நல்லூர் பகுதி மக்களுக்கு இன்று விநியோகம்

யாழ்ப்பாணம்,டிசெ.8

யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட விசேட கிளையில் நல்லூர் பலநோக்குக் கூட்டுறவு எல்லைப் பரப்பில் உள்ள நூற்று ஐம்பது குடும்பங்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருள்கள் இன்று வழங்கப்படவுள்ளன.

காலை 8.30 மணிமுதல் இப் பொருள்கள் வழங்கப்படும் எனவும் முதல் வருபவர்களுக்கு முதலில் வழங்குதல் என்ற அடிப்படையில் பொருள்கள் வழங்கப்படவுள்ளன.

யாழ்ப்பாணம் ப.நோ.கூ.சங்க எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு இன்று வழங்கப்படமாட்டாது எனவும் -

ஏற்கனவே இப் பகுதியில் உள்ளவர்களுக்கு வழங்கப்பட்டமையால் மீண்டும் வழங்கப்படும் திகதி பின்னர் அறிவித்தப்படும் என்றும் - தெரிவிக்கப்பட்டது. (1-68)

## ஆங்கில தினப் போட்டிகள் பிற்போடப்பட்டுள்ளன

யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நாளை இடம்பெறவிருந்த மாவட்ட மட்ட ஆங்கில தினப் போட்டிகள் பிற்போடப்பட்டுள்ளன.

பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களில் மிகப் பலரும் காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர். அதனால் பரீட்சையை ஒத்திவைக்க நேரிட்டதாக அறிவிக்கப்படுகிறது.

இதேவேளை ஆங்கில தினப் போட்டிகள் இம்மாதம் 17ஆம் திகதி இடம்பெறும் என இப்போட்டிக்கான இணைப்பாளர் வ.செல்வராஜா தெரிவித்தார். (அ-1)

## செயலமர்வு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.8

யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளில் நாளை சனிக்கிழமையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறவிருந்த சைவநெறி பாட செயலமர்வு எதிர்வரும் 22, 23ஆம் திகதிகளுக்குப் பிற்போடப்பட்டுள்ளது என்று யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (1-203)

## பரீட்சை நிலையம் இடமாற்றம்

இளவாலை மெய்கண்டான் ம.வியில் அமைய இருந்த ஜி.சீ.ஈ. சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை நிலையம் பரீட்சார்த்திகளின் வசதிகருதி இளவாலை கன்னியர்மடம் ம.விக்கு இடம் மாற்றப்பட்டுள்ளது என்று வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

இளவாலை மெய்கண்டான் ம.வி. பரீட்சை நிலையத்திற்கு என அனுமதி அட்டை கிடைத்த அனைத்து மாணவர்களும் இதனைக் கவனத்தில் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (203)

## பரிசில் நாள்

பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலய பரிசு நாளும் தாபகர் தினமும் இன்று காலை 9 மணிக்கு கந்தையா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் க.சந்திரசேகரன் தலைமையில் வைபவம் நடைபெறும். பிரதம விருந்தினராக சங்கானைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் துரை எங்கரசு கலந்துகொள்ளவுள்ளார். தாபகர் உரையை ஓய்வுபெற்ற ஆசிரியர் சி.ஞானச் சந்திரமூர்த்தி நிகழ்த்தவுள்ளார். (1-28)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேருநுவர பாடசாலை மீது ஷெல் ஆசிரியர் பலி! 10பேர் காயம்!

## மற்றொரு எறிகணையில் மூவர் மரணம்

கொழும்பு, டிசெ. 8

திருகோணமலை, சேருநுவர பகுதியில் அமைந்துள்ள சேரமாதேவி மகாவித்தியாலயம் மீது நேற்று முற்பகல் 11.10 மணியளவில் ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது. மாணவர்கள், மாணவிகள் ஒன்பது பேரும், ஆசிரியர் ஒருவரும் இத்தாக்குதலில் சிக்கிக் காயமடைந்தனர். படுகாயமடைந்த ஆசிரியர் பின்னர் உயிரிழந்தார்.

குறித்த பாடசாலைக்குச் சமீபமாக வீடு ஒன்றின்மீது வீழ்ந்து வெடித்த மற்றொரு ஷெல்லினால் 10 வயதுச் சிறுவன் உட்பட மூவர் உயிரிழந்தனர் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

பாடசாலைமீது வீழ்ந்து வெடித்த ஷெல்லினால் காயமடைந்த மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் உடனடியாக கந்தளாய் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். மாணவர்களில் இருவர் ஆபத்தான நிலையில் உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்த மாணவர்கள் ஆறு வயதுக்கும் 18 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இத்தாக்குதலினால் பீதியடைந்த மாணவர்கள் பாதுகாப்புத் தேடி அங்கும் இங்கும் ஓடினர். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின்கதி தெரியாது அலறியடித்துக்கொண்டு பாடசாலையை நோக்கி விரைந்தனர். அந்தப் பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டது.

சேரமாதேவி மகாவித்தியாலயம் மீது விடுதலைப் புலிகளே ஷெல் தாக்குதலை நடத்தினர் என்று தேசிய பாதுகாப்பு ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது. விடுதலைப் புலிகள் ஏவிய ஷெல்களே பாடசாலையைத் தாக்கின என்று அரசுத் தரப்பில் குற்றஞ்சாட்டப்படுகின்ற போதிலும் புலிகள் அதனை மறுத்திருக்கின்றனர்.

நேற்றுக்காலை தமது கட்டுப்பாட்டுப் பகுதியான வெருகல் பகுதியை நோக்கி அரச படைகள் முன்னேறி வந்தன என்றும் அவர்களை ஈச்சிலம்பற்று பகுதியிலேயே தாங்கள் எதிர்கொண்டு தாக்கினர் என்றும் தெரிவித்த புலிகளின் இராணுவப் பேச்சாளர் இ.இளந்திரையன், குறித்த பாடசாலை மீதும் அதற்கு அருகிலும் ஷெல்கள் வீழ்ந்திருந்தால் அது நிச்சயமாக தாங்கள் ஏவிய ஷெல்கள் அல்ல என்றும் தெரிவித்தார்.

## பேச்சுவார்த்தைகளில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

★ குடாநாட்டில் ஏற்பட்டுள்ள - ஏ-9 பாதை மூடப்பட்ட பின் ஏற்பட்டுள்ள- பேரவலம் காரணமாக மக்கள் பெரும் நெருக்கடி நிலையில் வாழ்கின்றனர். உணவு, உறைவிடம் இன்றி மக்கள் அல்லற் படுகிறார்கள்.

★ தொடரும் கொலைகள், காணாமற் போதல், கைதுகள் காரணமாக மக்கள் மத்தியில் பெரும் அச்ச நிலை நிலவுகின்றது. மனித உரிமைகள் அதிகளவில் மீறப்படுகின்றன.

★ தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு விடயத்தில் தென்னிலங்கை மக்கள் மத்தியில் தேவையற்ற அச்சமான சூழல் காணப்படுகிறது. அங்குள்ள பேரினவாத சக்திகள் மேற்கொள்ளும் தீவிர பிரசாரங்களால் தமிழர்கள் சிங்கள மக்களை சிறுபான்மையினராக்கிவிடுவார்கள் என்ற மன நிலை தோன்றி வருகிறது.

★ தமிழ் மக்களின் அபிலாஷைகளை தீர்க்கக்கூடிய தீர்வு ஒன்று காணப்படும் பட்சத்திலேயே நாட்டின் ஸ்திரத்தன்மை பாதுகாக்கப்படும்.

★ நோர்வே முன்னெடுத்த முயற்சிகள் யாவும் பயனற்றுப்போன நிலையே காணப்படுகின்றன. எனவே பேச்சுக்களில் காணப்பட்ட, எதிர்கால பேச்சுக்களில் காணப்படும் இணக்கப்பாடுகளை நடைமுறைப்படுத்த அரசு தரப்பு முன்வர அதற்கான அழுத்தம் இணைத் தலைமை நாடுகளிடம் இருந்தே வர வேண்டும். (அ-1-68)

## போர்நிறுத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'தேடுதல் நடவடிக்கைகளும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழான கைதுகளும் நடைபெறாதென இருதரப்பினரும் இணங்குகிறார்கள். கைதுகள் உரிய சட்டமுறைப்படி குற்றவியல் சட்டக் கோவையின் பிரகாரம் நடைபெறல் வேண்டும்.'

இப்படி அரசு - புலிகள் புரிந்துணர்வு உடன்படிக்கை கூறுகின்றது.

இதேவேளை -

பயங்கரவாத தடைச் சட்டத்தை நிராகரிக்கும் போர்நிறுத்த உடன்படிக்கையின் 2.12 பிரிவை மாற்றியமைக்க அரசு முடிவெடுத்துள்ளது என்று தெரியவருகிறது.

போர்நிறுத்த உடன்படிக்கையில் மாற்றம் எதுவும் செய்வதானால், செய்ய விரும்பும் தரப்பு அது குறித்து நோர்வே அனுசரணையாளர்களுக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும். ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ள இருபிரிவும் ஒத்துக் கொண்ட பிற்பாடே மாற்றத்தைச் செய்யமுடியும். ஆனால் அரசு தன்னிச்சையாக இந்த முடிவை எடுத்துள்ளது.

இது குறித்து கருத்துத் தெரிவித்த சட்ட நிபுணர்குழுவைச் சேர்ந்த ஒருவர், அண்மை நிகழ்வுகளின் அடிப்படையில், பங்கரவாதத்தை ஒடுக்கும் நோக்கில் அரசு இந்த முடிவை எடுத்துள்ளது. பயங்கரவாத நடவடிக்கைகளை முடக்கும் நடவடிக்கைகளுக்கு சர்வதேச சமூகம் ஆதரவாக உள்ளது என்று தெரிவித்தார்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை அமுல்படுத்துவது பற்றி ஜனாதிபதி மஹிந்த, ரணி [illegible] தெரிவித்துள்ளார். ஆனால் பயங் [illegible] தை அமுல்படுத்து [illegible] ப்பமில்லை எனத் தெரி [illegible] ள்ள ரணில், தேவையெனில் அவசரகாலச் சட்டத்தை மாற்றி அமைக்கலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

மனித உரிமை இயக்கத்தினரும் இச்சட்ட அமுலுக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

பயங்கரவாத தடைச் சட்டம், 2002ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கைச்சாத்தாகியுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையில் எட்டப்பட்ட போர்நிறுத்த ஒப்பந்தத்தின் சரத்துகளை மீறுவதாகத் தோன்றுகின்ற போதிலும் இந்தச் சட்டம் குறித்த மேலதிக விவரங்களை பெறும் நோக்கில் அரச தரப்புடன் பேச்சு நடத்தவுள்ளதாக இலங்கைப் போர்நிறுத்த கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது. (ஐ)

## கிளைமோரில் உயிரிழந்தோரின்சடலங்கள் நேற்று உறவினர்களிடம் கையளிப்பு

யாழ்ப்பாணம், டிச. 08

யாழ். நகரப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கிளைமோர் தாக்குதலில் உயிரிழந்த பொதுமக்கள் நால்வரினதும் சடலங்கள் மரண விசாரணையின் பின்னர் நேற்று அவர்களது உறவினர்களிடம் கையளிக்கப்பட்டன.

புங்குடுதீவைச் சேர்ந்தவர்களான தம்பையா தெய்வேந்திரன் (வயது-48), அவரது மனைவியான திருமதி பவளமணி தெய்வேந்திரன் (வயது - 46) மற்றும் அவர்களது பேரப்பிள்ளையான நந்தகுமார் பிரசாந்தினி (வயது-4), சண்டிலிப்பாய் அந்திரானைச் சேர்ந்த செல்லையா ரகுநாதன் (வயது-50) ஆகியோரே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களாவர்.

## காக்கைதீவில் தமிழ் இளைஞர் சுட்டுக் கொலை!

கொழும்பு, டிச. 8

மட்டக்குளி காக்கைதீவுப் பகுதியில் நேற்று முற்பகல் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் ஒன்றில் தமிழ் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார். மற்றொரு இளைஞர் காயமடைந்தார்.

கடற்படையினரின் துப்பாக்கியைப் பறிக்க முற்பட்ட சமயமே இந்தச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றது என்று முதலில் கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

பொலிஸார் வழங்கிய தகவல் ஒன்றின் பேரில் கடற்படையினர் அப்பகுதியில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த வேளை இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது.

உயிரிழந்த மற்றும் காயமடைந்த இளைஞர்களின் பெயர் விவரங்கள் உடனடியாகத் தெரியவரவில்லை. (ஐ-3)

## விழிப்புல வலுவிழந்த பிள்ளைகளை இணைக்க விண்ணப்பம்

யாழ்ப்பாணம், டிசெ.8

விழிப்புல வலுவிழந்தோர் வாழ்வகத்திற்கு அடுத்து ஆண்டில் மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பார்வையற்ற, பார்வைக் குறைபாடுள்ள பிள்ளைகளைக் கொண்டுள்ள பெற்றோர்கள், தங்கள் பிள்ளைகள் பற்றிய விவரங்களுடன் எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் 'தலைவர், விழிப்புல வலுவிழந்தோர் வாழ்வகம், சபாபதிப் பிள்ளை வீதி, சுன்னாகம்' என்னும் முகவரியுடன் கடிதம் மூலமாகவோ அல்லது நேரிலோ தொடர்பு கொள்ளுமாறு கேட்கப் பட்டுள்ளனர்.

தங்குமிடம், உணவு, கல்வி மற்றும் ஏனைய வசதிகள் இலவசமாக வழங்கப் படும் என்று தெரிவிக்கப்பட்டது. (202)

## புலிகளோடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தில் ஹன்சன் போவர் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப்பேச்சு நடத்துவார் என கிளிநொச்சியிலுள்ள விடுதலைப் புலிகளின் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

போவர் இன்று காலை ஹெலிகொப்டர் மூலம் வவுனியா சென்று அங்கிருந்து தரை வழியாக கிளிநொச்சி செல்வார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த நவம்பர் 31ஆம் திகதி இலங்கை வந்து சேர்ந்த ஹன்சன் போவர் கடந்த 4ஆம் திகதி திங்கட்கிழமை விடுதலைப் புலிகளைச் சந்தித்துப் பேச்சு நடத்தத் திட்டமிட்டிருந்தார்.

பாதுகாப்பு செயலாளரும் ஜனாதிபதியின் சகோதரருமான கோட்டபாய ராஜபக்ஷவை இலக்கு வைத்து கொழும்பு பித்தளைச் சந்தியில் தற்கொலைத் தாக்குதல் நடத்தப்பட்ட பின்னர், புலிகள் இயக்கம் குறித்து முக்கிய முடிவுகள் எடுக்கப்படவுள்ளதாக தெரிவித்து போவரின் கிளிநொச்சி விஜயத்தை அரசு இடைநிறுத்தி வைத்தது. இதையடுத்தே போவர் இன்று கிளிநொச்சிக்கு செல்கின்றார். (ஐ)

## முழுநாடும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளது. இதனால் நாடும், மக்களும்தான் அவதிக்குள்ளாகப் போகிறார்கள்'' என்றார் தயா மாஸ்டர். (ஐ)

## இந்தியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டில்லி சென்று எடுத்துக்கூறக் கடமைப் பட்டிருக்கிறேன். பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் மணியானாலும், மருத்துவர் இராமதாஸானாலும், இலங்கைப் பிரச்சினையை என்னால்தான் தீர்க்க முடியும் என்று கூறும்போது முதலமைச்சர் பதவியில் இருப்பதால் என்னால் தீர்க்கமுடியும் என்று கருதுகிறார்களா? அல்லது கருணாநிதியால் முடியும் என்று கருதுகிறார்களா? என்று தெரியவில்லை.

இலங்கைப் பிரச்சினை நமது உணர்வோடு உயிர் மூச்சோடு கலந்தது. எனவே, தனியாகத் தீர்மானம் போட்டு மத்திய அரசுக்கு நெருக்கடி கொடுக்கவேண்டாம். நாமும் நெருக்கடிக்கு ஆளாகத் தேவையில்லை. தீர்மானத்தை ஒரு வாசகமாக வாசிக்கிறேன்.

''இலங்கையில் தமிழ் மக்களுக்கு பாதுகாப்பு இல்லாத சூழ்நிலையுள்ளது. அங்கு நிலைமை மேலும் மோசமாகிறது. இது குறித்து ஆழ்ந்த வேதனையை சபை தெரி வித்துக்கொள்கிறது. பிரச்சினைக்கு விரைவில் ஒரு முடிவுகாண மத்திய அரசு உரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்''.

இந்தத் தீர்மானம் அனைவருக்கும் பொதுவான தீர்மானமாகக் கருதி நிறை வேற்றித் தரும்படி கேட்டுக்கொள்கி றேன் - என்றார் அவர்.

முதலமைச்சரின் உரையைத் தொடர்ந்து சட்ட சபையில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. (அ-க)


நாளை ஆரம்பம்
கல்வியாண்டு - 2007
தரம் 6 தொடக்கம் O/L வரை
ஆரம்பம்: 12.00 சனி
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
யாழ். நகரில் தனித்துவம் வாய்ந்த ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவை
விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்.

கல்வியாண்டு - 2007
தரம் 5 முதல் 11 வரையான சகல வகுப்புகளும்
ஆரம்பம்: 09.12.2006 (சனி 3.30)
ஸ்ரார் கல்வி நிலையம்
சுன்னாகம்.

நாவலர் இன்ஸ்ரிரியூட்
தலைமை நிறுவனம் ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். | கிளை நிறுவனம் பலாலி வீதி, திருநெல்வேலி
இரு இடங்களிலும்
தரம் 1 முதல் O/L வரை
புதிய கல்வியாண்டு - 2007 க்கான வகுப்புகள்
டிசெம்பர் 9 இல் ஆரம்பம்
(நாளை காலை 8.30 மணி)
அனுமதிகளை இன்று முதல் பெறவும்.

கற்சுமி கல்வி நிறுவனம்
166, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
கல்வி ஆண்டு 2007ற்குரிய தரம் 1 முதல் O/L வரையான வகுப்புகள்
ஆரம்பம் 09.12.2006
சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு

PERSONAL CLASSES
364 Stanly Rd. Jaffna.
தமிழ்
A/L 2007 - 2- 3p.m.
2008 - 9-10 a.m
திரு. தர்மராஜா
ஆரம்பம்: நாளை
வசதிற்கேற்ப நேரசூசி.

அன்பொளி கல்வி நிலையம்
தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி
தென்மராட்சி மாணவர்களுக்கு 2007 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புகள் ஆரம்பமாகின்றன.
ஆசிரியர் திரு.மு.வே.அன்பழகன்
தரம் 4 வகுப்புகளும் ஆரம்பமாகின்றன.
காலம்: 10.12.2006 பி.ப. 2.30 மணி
அனுமதிகள் 08.12.2006 வெள்ளிக்கிழமை பி.ப. 3 - 5மணி வரை முன்கூட்டியேபெற்றுக்கொள்ளவும்.
இயக்குநர்.

பொருளியல்
திரு. விக்கி
Paper Class
ஆரம்பம் 9.12.2006
சனி 2 p.m.
யூனிவேர்சல்

புவியியல்
திரு. பாபு
Day Class
ஆரம்பம் 10.12.2006
ஞாயிறு 1 p.m.
யா/இந்து மகளிர் கல்லூரி அருகில்

நியூட்டன் அக்கடமி
கோண்டாவில்
புதிய கல்வியாண்டு - 2007
தரம் 1 முதல் O/L வரை சகல வகுப்புகளும் ஆரம்பமாகின்றன.
ஆரம்பம்: 09.12.2006 SAT 10.00 a.m.
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

பிறைற்மன் கல்வி நிலையம்
பிரவுண் வீதி நீராவியடி.
புதிய கல்வியாண்டு - 2007
தரம் 1 முதல் O/L வரை சகல வகுப்புகளும் ஆரம்பமாகின்றன.
ஆரம்பம்: 09.12.2006 SAT 8.30
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

Physics
K.Selvan
இலத்திரனியல்
ஆரம்பம் 9.12.2006
சனி 4.30 p.m.
(Sa. Su. 4.30 p.m.)
யூனிவேர்சல்

இந்து நாகரிகம்
S.ஜெயக்குமார்.
DAY, PAPER CLASS
ஆரம்பம்: 9.12.2006
(Sa. Su. 1 p.m.)
யா/இந்து மகளிர் கல்லூரி அருகில்

எடிசன் அக்கடமி
தலைமை நிறுவனம் : யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை எதிரில் - 539A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
கிளை நிறுவனம் : 18, வைமன் வீதி, நல்லூர்.
தரம் 6 முதல் O/L வரை
(English Medium வகுப்புகளும்)
கணிதம் : B.P.பாஸ்கரன், P.சிவகுமார் T.தயாளன், அருமைநாயகம் M.கஜன், உமாகரன்
விஞ்ஞானம் : இரா செல்வவடிவேல், பாலா K.பகீரதன், P.ரகுமார் P.சிவானந்தராஜா
சமூகக்கல்வி: V.தவகுலசிங்கம், S.சந்திரன் S.குணசிங்கம்
தமிழ்: பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை, S.ரகுபதி
ஆங்கிலம் : சுதர்சன், மோகன், ஜனகன்.
வர்த்தகம் : சுதேசன்
சுகாதாரம் : M.பிரபாகரன், S.சியாமளன்.
ஆரம்பம்: 09.12.2006 சனிக்கிழமை
யாழ். - காலை 7 மணி
நல்லூர் - மு.ப. 11 மணி


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.12.2006இல் அச்சிட்டுவெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org